திருநெல்வேலி மாவட்டம்

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

**நேரம் : 3.00 மணி** **பொதுத்தமிழ்** **மதிப்பெண்கள்:90**

## பகுதி - I

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும் அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

குறிப்பு : 1. விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் ., சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி - அ ( செய்யுள் , உரைநடை )

I.பலவுள் தெரிக : (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக) 14 x 1 = 14

1) தவறான இணையைத் தேர்க

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள் வெண்பா | - | திருக்குறள் |

2) தமிழில் திணைப் பாகுபாடு ______ அடிப்படையில் பகுப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

3) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு
இ) கடுக்காடு ஈ) மாவிலைக்கரி

4) திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்
அ) தாமஸ் ஆல்வா எடிசன் ஆ) ஜார்ஜ் மிலி
இ) சாமிக்கண்ணு வின்சென்ட் ஈ) டுபான்

5) இரு திணைக்கும் பொதுவாக வரும் சொற்கள்
அ) குழந்தை , கதிரவன் ஆ) மரம் , மனிதர்கள்
இ) சீதா , இராமன் ஈ) நாம் நாங்கள்

6) பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.
அ) கர்ணன் தோற்றான் போ
ஆ) வயதில் சிறியவள் , ஆனாலும் தலைவி !
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு
ஈ) இந்தா போறான் தருமன்.

7) வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு ?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத் துணை நன்றி ஈ) செய்ந் நன்றி

8) சார்லி சாப்ளின் எதிரிகளின் வாய்களை அடைத்து எடுத்த பேசும் திரைப்படம்
அ) சிட்டி லைட்ஸ் ஆ) சிட்டி நைட்ஸ்
இ) வில்லேஜ் லைட்ஸ் ஈ) வில்லேஜ் நைட்ஸ்

9) அறிவுடை நம்பி ஆண்ட நாடு
அ) சேர நாடு ஆ) சோழநாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு

10) மலைதல் இலக்கண குறிப்புத் தருக.
அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
இ) வியங்கோள் வினைமுற்று ஈ) வினையெச்சம்

11) ' **செய்த** ' என்றச் சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை
அ) செய்து + அ ஆ) செய் + த்(ந்) + த் + அ
இ) செய் + து ஈ) செய் + த் + அ

12) " **ஈறுபோதல்** , முன்னின்ற மெய்திரிதல் 'எச் சொல்லுக்குரிய புணர்ச்சி விதி ?
அ) கருங்குயில் ஆ) வெங்கதிர்
இ) நெடுந்தேர் ஈ) முதுமரம்

13) ' **கோடை மழை** ' என்ற கதையின் ஆசிரியர் பெயர்
அ) சாந்தா தத் ஆ) தோப்பில் முகமது மீரான்
இ) பூமணி ஈ) புதுமைப்பித்தன்

14) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ் நதி கடக்கச் சொல்வது
அ) கடந்த கால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்வும்:**

### பிரிவு - 1

II. **எவையேனும் மூன்றனுக்கு விடைதருக.** 12 X 2 = 24

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன்ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17) இடையீடு - எவற்றை குறியீடாகக் குறிப்பிடுகிறது?
18) விண் வெளியில் இயங்குவனாகச் சுரதா கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.**

19) ஒரு முக எழினி, பொருமுக எழினி குறிப்பு எழுதுக.
20) செவியறிவு றூஉ துறையை விளக்குக ?
21) முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தைக் கூறுக .

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக .**

22) பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்தெழுதுக.
**தலை , தளை.**

23) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் , உண்மையானவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

24) கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொல் எழுது.
அ) Lobby ஆ) Tips

25) உவமைத் தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக.
உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

26) ' **எத்திசை** ' - பிரித்து புணர்ச்சி விதி கூறுக.

27) சாற்றி - உறுப்பிலக்கணம் தருக.

28) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

29) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக .
ரவைக்கு சித்தப்பன் காவலுக்குப் போவசொல்.

30) விடைக்கேற்ற வினா அமைத்தல்.
நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

## பகுதி - III

### பிரிவு - 1

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் .**
**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 7 x 4 = 28

31) எவற்றையெல்லாம் பசுமைக்குடில் வாயுக்கள் என்கின்றோம் ?
32) தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள் யாவை ?
33) திரைப்படத் துறையின் தோற்றம் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்களைக் குறிப்பிடுக.
34) இராமன் கூறிய ' ஐவர் ' அறுவர் என்பவரின் பெயர் என்ன ? விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :**

35) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
36) மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
37) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :**
**குறிப்பு : காது கேளாத மணவர்களுக்கு மட்டும் வினா எண் 42க்கு பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.**

39) ஏகதேச உருவக அணி (அல்லது) உவமையணியைச் சான்றுடன் விளக்குக.
40) இலக்கிய நயம் பாராட்டுக.
(ஆசிரியர் குறிப்பு , மையக்கருத்து , திரண்டகருத்தை எழுதுக. )

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூ வென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !

- பாரதியார்.

41) கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை | பத்துப்பாட்டு

| அகம் | புறம் | அகமும் புறமும் | அகம் | புறம் |
|---|---|---|---|---|
| நற்றினை | புறநானூறு | பரிபாடல் | குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | | முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| ஐங்குறுநூறு | | | நெடுநெல்வாடை | பொருநராற்றுப்படை |
| அகநானூறு | | | பட்டினப்பாலை | சிறுபானாற்றுப்படை |
| கலித்தொகை | | | | பெரும்பானாற்றுப்படை |
| | | | | கூத்தராற்றுப்படை |

42) தமிழாக்கம் தருக.

அ) A new language is a new life

ஆ) Knowledge is power

இ) Mathai was elected to the parliament and made a minister of environment.

ஈ) Work more talk less.

42) காது கேளாதோருக்கான மாற்று வினா.

பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கேற்ற விடை தருக.

இயல் , இசை , நாடகம் , என மூவகையில் அமையும் முத்தமிழ் கடைசியாக அமைவது நாடகம் . நாடகத்தைப் ' பாமர மக்களின் பல்கலைக்கழகம் '' என்பர். நாடக வேந்தர் டி.கே. சண்முகம் அவர்கள் , பார்த்தும் கேட்டும் மகிழத்தக்கது நாடகம் என்பர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும் நடிகர்களைக் கூத்தாடி என்றும் அழைத்தனர் . சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களுள் கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் ' கூத்தாட்டவைக் குழாத்தற்றே '' என நாடகம் நடைபெறும் இடத்தைக் கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

வினாக்கள்:

1. முத்தமிழ் யாது ?
2. நாடக வேந்தர் என்று அழைக்கப்படவர் யார் ?
3. நாடக அமைப்பு முறையை முதலில் கூறிய நூல் யாது ?
4. நாடக அரங்கைத் திருக்குறள் எப்பெயரால் சுட்டுகிறது.

43) நீவிர் செல்லும் வழியில் விபத்தினைக் காண்கிறீர்கள். விபத்துக்கான காரணங்கள் என்ன? பட்டியலிடுக. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீ எவ்விதம் உதவுவாய் ?

## பகுதி - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடைதருக :** 3 x 6 = 18

44) மயிலையார் ஓர் ' **ஆராய்ச்சிப் பேரறிஞர்** ' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க . **(அல்லது)**

ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு. நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

45) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க. (அல்லது)

எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன . - நிறுவுக.

46) மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மன வோட்டத்தை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

பொறுப்புணர்ச்சியின்ற இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக :**

47) அ) **' காய் நெல் ' ' அறுத்துக் '** எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் 1 x 4 = 4

ஆ) **' அரண்'** என முடியும் குறட்பா 1 x 2 = 2

★★★★★★★★★★